



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.12.2024) சென்னை நந்தனம், ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் 48–வது புத்தகக் காட்சியைத் திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், சி.வி.எம்.பி. எழிலரசன், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, துணை மேயர் மு. மகேஷ் குமார், நக்கீரன் கோபால், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர்/ பொது நூலகத் துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், எழுத்தாளர்கள், பதிப்பக உரிமையாளர்கள் உட்பட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தென்னிந்திய புத்தக விற்பனையாளர் - பதிப்பாளர் சங்கம் (பபாசி) சார்பில் - சென்னையில்

# 44வது புத்தகக் காட்சி! துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

## பதிப்பக அரங்குகளை பார்வையிட்டார்! நிகழ்ச்சியில் அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி - மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

சென்னை, டிச. 29-

தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் 48-வது புத்தகக் கண்காட்சியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். இந்த கண்காட்சியில் 900 புத்தக ஸ்டால்கள் இடம் பெற்றுள்ளன. இதையடுத்து இந்த கண்காட்சி ஜனவரி 12ம் தேதி வரை நடக்க உள்ளது. இதுகுறித்து தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் செயலாளர் முருகன் அளித்த பேட்டி:

தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் 48-வது புத்தகக் கண்காட்சி சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் டிசம்பர் 27ம் தேதி தொடங்கி ஜனவரி 12ம் தேதி வரை நடத்த திட்டமிடப்பட்டது. இந்த கண்காட்சியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க ஒப்புதல் தெரிவித்து இருந்தார். அதன்படி திட்டமிட்டபடி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்காட்சியை தொடங்கி வைத்துள்ளார்.

இந்த தொடக்க விழாவில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, நக்கீரன் கோபால், அதன் மேலாண் இயக்குநர் சங்கர் உள்ளிட்ட பல அரசு அதிகாரிகளும் பங்கேற்றனர். பதிப்பாளர் சங்கத்தில் இடம் பெற்றுள்ள 900 பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்காக 2 லட்சம் சதுரடியில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதில் தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத் துறையின் அரங்கு, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் அரங்கு, பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் ஒரு அரங்கு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம், தொல்லியல் துறை, இல்லம்தேடிக் கல்வி ஆகியவையும் இடம் பெற்றுள்ளன. கடந்த ஆண்டு சென்னையில் நடந்த 47-வது கண்காட்சிக்கு சுமார் 20 லட்சம் பார்வையாளர்கள் வந்தனர். அதன் மூலம் ரூ.21கோடி மதிப்பு புத்தகங்கள் விற்பனையானது.

இந்த ஆண்டு சுமார் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருவார்கள் என்று கணக்கிட்டு புத்தாண்டுக்கு முன்னதாகவே தொடங்கி பொங்கல் பண்டிகைக்கு முன்னதாகவே கண்காட்சியை நிறைவு செய்கிறோம். இதனால் கடந்த ஆண்டை விட அதிக அளவில் புத்தகம் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கிறோம். கண்காட்சிக்கு வருவோருக்கு நுழைவுக் கட்டணம் ரூ.10 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவ - மாணவியர் வந்து செல்லும் வகையில் 10 லட்சம் டிக்கெட்கள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. இவ்வாறு செயலாளர் முருகன் தெரிவித்தார்.

★ 'சூரியன் பதிப்பக' ஸ்டால் எண் 329, 330 வழக்கமாக ஒவ்வோர் ஆண்டும் 'தினகரன்' நாளிதழின் சூரியன் பதிப்பக ஸ்டால் இந்த ஆண்டும் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது. சூரியன் பதிப்பகத்துக்காக 2 ஸ்டால்கள் (எண் 329 மற்றும் 330) ஒதுக்கப்பட்டுள்ளன. பொது அறிவு, சிந்தனைக்கு உரமளிக்கும் வகையில் முற்போக்கு எழுத்தாளர்களால் எழுதப்பட்டுள்ள, கருத்தாழம் மிக்க புத்தகங்கள், பொதுவுடைமை கருத்துகள் கொண்டதும், சமூக, சமத்துவத்துக்கான புத்தகங்கள், அரசியல் தலைவர்கள் பற்றியவை என படிப்போருக்கு புதிய பாதைக்கு வழிவகுக்கும் புத்தகங்கள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள கோயில்கள், வரலாறு மற்றும் புராணங்களில் புகழ் பெற்ற இடங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய புத்தகங்கள்,

தமிழரின் ஐவகை நிலங்கள் மற்றும் அது சார்ந்த மக்களின் வாழ்வியல் கூறுகளை தெள்ளத் தெளிவாக விளக்கும் புத்தகம், இளைய தலைமுறையினரும் அறிந்து கொள்ளத் தக்க வகையில் நவீன கருத்துகள் கொண்ட புத்தகங்கள் என சூரியன் பதிப்பகத்தில் பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்டு புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. சூரியன் பதிப்பக புத்தகங்களை தபால் மூலம் வாங்கி பயன்பெற்ற வாசகர்கள், இந்த 48வது புத்தகக் கண்காட்சியில் நேரடியாகவே வந்து பல்வேறு தலைப்புகளில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை அவர்களின் விருப்பத்துக்கேற்ப வாங்கிக்கொள்ள முடியும்.

# சிவகங்கையில் மாவட்ட கழக வழக்கறிஞரணி ஆலோசனைக் கூட்டம் !

## மாவட்ட அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன் வேண்டுகோள்!

சிவகங்கை, டிச.29-

சிவகங்கை மாவட்ட கழக வழக்கறிஞரணி அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

கழகத் தலைவர், தளபதி அவர்கள் ஆலோசனையின் பேரிலும் துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், மாநில சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ.எம்.பி. ஏற்பாட்டில் வருகிற 18.1.2025 ஜனவரி மாதம் சென்னையில் மூன்றாவது வழக்கறிஞரணி மாநில மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் அதிக அளவில் நமது கழக வழக்கறிஞர்கள் பங்கேற்பது குறித்து ஆலோசனைக் கூட்டம் நாளை 30 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11.00மணி அளவில் சிவகங்கை கல்லூரி சாலையில் அமைந்துள்ள தெற்கு ஒன்றிய அலுவலக மான தலைவர் கலைஞர் அறிவாலயத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இந்த கூட்டம் மாவட்ட கழக செயலாளர், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் தென்மண்டல பொறுப்பாளர் வழக்கறிஞர் கே.எஸ்.ரவிச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஏ.கலாநிதி ஆகியோர் முன்னிலையில் மாநாடு குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

எனவே இந்த ஆலோசனை கூட்டத்தில் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்தகவலை மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.



நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (27.12.2024) திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ஓய்வு பெற்ற மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் துரைசாமி ராஜு, க.ரவிச்சந்திர பாபு மற்றும் செல்வி ஆர். மாலா ஆகியோர் முன்னிலையில் சமயபுரம் உள்ளிட்ட 5 திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 541 கிலோ 781 கிராம் எடையுள்ள பலமாற்று பொன் இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கிடவும், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயிலில் இருப்பில் இருந்த 30 கிலோ 596 கிராம் சுத்த தங்கக் கட்டிகளை வங்கியில் முதலீடு செய்திடும் வகையிலும் பாரத ஸ்டேட் வங்கியில் துணை பொது மேலாளர் அதுல் பிரியதர்ஷினி அவர்களிடம் ஒப்படைத்தனர். உடன் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கதிரவன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப்குமார். இணை ஆணையர்கள் திருமதி சி.கல்யாணி, திருமதி இரா.வான்மதி, எ.ஆர்.பிரகாஷ், பாரத ஸ்டேட் வங்கியின் மண்டல மேலாளர் எஸ்.மதன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.12.2024) சென்னை நந்தனம், ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் 48–வது புத்தகக் காட்சியைத் திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், சி.வி.எம்.பி. எழிலரசன், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, துணை மேயர் மு.மகேஷ் குமார், நக்கீரன் கோபால், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர்/பொது நூலகத் துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், எழுத்தாளர்கள், பதிப்பக உரிமையாளர்கள் உட்பட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சமயபுரம் கோயில் உள்ளிட்ட 5 திருக்கோயில்களில் பெறப்பட்ட

# 541.781 கிலோ பொன் இனங்கள் தங்க முதலீடு பத்திரத்தில் முதலீடு!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - பி.கே.சேகர்பாபு ஒப்படைத்தனர்!

சென்னை, டிச.29-

சமயபுரம், மாரியம்மன் திருக்கோயில் உள்ளிட்ட 5 திருக்கோயில்களில் பயன்பாட்டில் இல்லாத பிரித்தெடுக்கப்பட்ட 541 கிலோ 781 கிராம் எடையுள்ள பலமாற்று பொன் இனங்களை உருக்கி தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியிடம் அமைச்சர் பெருமக்கள் கே.என்.நேரு மற்றும் பி.கே.சேகர்பாபு ஆகியோர் ஒப்படைத்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (27.12.2024) திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயிலில் ஓய்வு பெற்ற மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் துரைசாமி ராஜு, க. ரவிச்சந்திர பாபு மற்றும் செல்வி ஆர். மாலா ஆகியோர் முன்னிலையில் சமய புரம், மாரியம்மன் திருக்கோயில், நாமக்கல் மாவட்டம், நாமக்கல், நரசிம்ம சுவாமி திருக்கோயில், சேலம் மாவட்டம், சேலம், கோட்டை மாரியம்மன் திருக்கோயில், கோட்டை, அழகிரிநாத சுவாமி திருக்கோயில், காருவள்ளி, பிரசன்ன வெங்கட்ரமண சுவாமி திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 541 கிலோ 781 கிராம் எடையுள்ள பலமாற்று பொன் இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் துணை பொது மேலாளர் அதுல் பிரியதர்ஷினியிடம் ஒப்படைத்தனர்.

மேலும், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயிலில் இருப்பில் இருந்த 30 கிலோ 596 கிராம் சுத்த தங்கக் கட்டிகளை வங்கியில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைத்தனர்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

திருக்கோயில்களுக்கு வருவாய் ஈட்டுகின்ற வகையில் அங்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்று பொன் இனங்களை பிரித்தெடுத்து, பயன்பாடற்ற பொன் இனங்களை உருக்கி வங்கியில் தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யும் திட்டமானது கடந்த ஆட்சிக் காலத்தில் தடைபட்டிருந்தது. திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றபின், இத்திட்டம் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன். இத்திட்டத்தினை மீண்டும் தொடங்கிட உத்தரவிட்டார், இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்திட பணிகளை மேற்கொண்டபோது திருக்கோயிலுக்கு ஆதரவு என தெரிவிக்கின்ற ஒரு பிரிவினர் இதனை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இருப்பினும் முதலமைச்சர் அவர்கள் இந்த நல்ல திட்டத்தை செயல்படுத்திடும் வகையில் தமிழ்நாட்டை மூன்று மண்டலங்களாகப் பிரித்து ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி துரைசாமி ராஜு, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் செல்வி ஆர். மாலா, க.ரவிச்சந்திரபாபு ஆகியோர் தலைமையில் குழுக்கள் அமைத்து செயல்படுத்திட உத்தரவிட்டார்.

**ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5.79 கோடி வட்டி!**

அதனைத் தொடர்ந்து, ஓய்வு பெற்ற நீதியரசர்கள் தலைமையில் 23 திருக்கோயில்களின் பயன்பாடற்ற பொன் இனங்களை பிரித்து அதில் 13 திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்களை உருக்கி, 442 கிலோ 107 கிராம் எடையுள்ள சுத்த தங்க கட்டிகள் பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.5.79 கோடி வட்டித் தொகையாக கிடைக்கப்பெற்று அந்தந்த திருக்கோயில்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் சமயபுரம், மாரியம்மன் திருக்கோயில் உள்ளிட்ட 5 திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 541 கிலோ 781 கிராம் எடையுள்ள பலமாற்று பொன் இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயிலில் சுத்த தங்கக் கட்டிகளாக மாற்றப்பட்டு வங்கியில் வைப்பு நிதியில் வைக்கப்படாமல் இருந்த 30 கிலோ 596 கிராம் சுத்த தங்கக் கட்டிகளையும் பாரத ஸ்டேட் வங்கியிடம் முதலீடு செய்துள்ளோம்.

இந்த திட்டத்தின்கீழ் ஆண்டு இறுதிக்குள் 1,000 கிலோ தங்கக் கட்டிகளை முதலீடு செய்யும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆண்டிற்கு ரூ.10 கோடி வட்டித் தொகையாக கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், சமயபுரம், மாரியம்மன்திருக்கோயிலின் முழுநேர அன்னதானத் திட்டத்தில் வடை மற்றும் பாயசம் வழங்கும் திட்டம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

**பழனி தண்டாயுதபாணி கோயில்!**

பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஏற்கனவே காலை சிற்றுண்டி திட்டம் தொடங்கப்பட்டிருந்த நிலையில் மதிய உணவு வழங்கும் திட்டத்தையும், அழகர்கோவில் மற்றும் மருதமலை திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தையும் நேற்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இதனையும் சேர்த்து 13 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு சுமார் 150 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. இந்து சமய அறநிலைத்துறையின் சார்பில் செயல்படுகின்ற அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கும் திட்டத்தை கொண்டு வருவதற்குண்டான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

**திராவிட மாடல் ஆட்சி!**

அர்ச்சகர்கள் நியமனம் தொடர்பாக உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது. இது குறித்து தொடரப்பட்ட பல்வேறு வழக்குகளை ஒன்றாக இணைத்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு விரைவில் விசாரணைக்கு வர இருக்கின்றது. அரசு தரப்பில் நியாயத்தை எடுத்துச் சொல்லி நிச்சயம் அந்த தடையை விலக்கி திராவிட மாடல் ஆட்சியில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தை தொடர்வோம். இந்த திருக்கோயிலில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்டவர் தான் கருவறையில் இருந்து வெளியே வந்து இன்றைக்கு குங்குமத்தை வழங்குகிறார். இதுதான் திராவிட மாடல் ஆட்சியின் எடுத்துக்காட்டாகும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கதிரவன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், இணை ஆணையர்கள் திருமதி சி.கல்யாணி, திருமதி இரா. வான்மதி, எ.ஆர்.பிரகாஷ், பாரத ஸ்டேட் வங்கியின் மண்டல மேலாளர் எஸ்.மதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.